செ.வெ.எண்: 414/2016 நாள்: 01.07.2016

# பத்திரிகை செய்தி

## கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த்துறையில் காலியாக உள்ள மசால்ஜி பணியிடங்கள் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., தகவல்**

**<<<O>>>**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வருவாய்த்துறையில் காலியாக உள்ள **6 மசால்ஜி பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளது. இந்த பணியிடங்கள் பொதுப்பிரிவு (முன்னுரிமை) -1, ஆதி திராவிடர் (அருந்ததியர்) (விதவை முன்னுரிமை) - 1, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமை) - 1, பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம் நீங்கலாக முன்னுரிமை) - 1, பொதுப்பிரிவு (முன்னுரிமையற்றோர் விதவை) - 1, ஆதி திராவிடர் (முன்னுரிமை) - 1** ஆகியோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அடைகுறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள இன சுழற்சியினை சார்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த பதவிக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்சம் தமிழில் எழுதப்படிக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும். 01.01.2016 அன்று குறைந்தபட்ச வயது 18 ஆகவும் அதிகபட்ச வயது வரம்பு என்பது தாழ்த்தப்பட்டோர் /பழங்குடியினர் இனத்தவர் எனில் 35-ம் பிற்படுத்தப்பட்டோர் /மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் எனில் 32-ம் இதர பிரிவினருக்கு 30-ம் ஆகும்.

விண்ணப்ப படிவங்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ, www.kanyakumari.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 15.07.2016 அன்று மாலை 05:45 -க்குள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சஜ்ஜன்சிங் ரா. சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

உண்மை நகல்/ உத்தரவுப்படி

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.